திரு. மு. திராவிடமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரைக்கும் அனுமதித்ததற்கு நன்றி.*

6. விதி 110-ன்கீழ் அறிக்கைகள்

(அ) சிறைச்சாலைகளுக்கு மருத்துவ உபகரணங்கள் வழங்குதல் மற்றும் சிறைப் பணியாளர்களுக்கு குடியிருப்புகள் கட்டுதல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவை விதி 110-ன்கீழ் அறிக்கைகள் அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்.*

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறைக் கைதிகளைச் சீர்திருத்தும் இடமாக, அவர்களுக்கு மறுவாழ்வு அளிக்கும் இடமாக, மீண்டும் குற்றங்கள் ஏற்படாவண்ணம் தடுக்கும் இடமாக விளங்கிக்கொண்டிருக்கும் சிறைகளின் கட்டமைப்பு மற்றும் சிறைக் கைதிகளின் வாழ்க்கைத்தரம் ஆகியவற்றை மேம்படுத்தி சிறைப் பணியாளர்களுக்குத் தேவையான வசதிகளைச் செய்து கொடுப்பதில் இந்தியாவிற்கே வழிகாட்டியாக எனது தலைமையிலான தமிழ்நாடு அரசு விளங்கிக்கொண்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இப்படிப்பட்ட இன்றியமையா துறையை மேலும் மேம்படுத்தும் வகையில், பின்வரும் புதிய அறிவிப்புகளை இந்த மாமன்றத்தில் அறிவிப்பதில் நான் பெருமகிழ்ச்சியடைகிறேன்:*

1. தமிழக சிறைத் துறையின்கீழ் செயல்பட்டுவரும் 9 மத்திய சிறைகள், 3 பெண்கள் தனிச் சிறைகள், Borstal school, *வளரிளம் பருவத்தினர் சீர்திருத்தப் பள்ளி மற்றும் மாவட்ட சிறை, புதுக்கோட்டை ஆகியவற்றில் உள்ள மருத்துவமனைகளில் அனுமதிக்கப்படும் சிறைவாசிகளுக்கு அவசர மருத்துவ சிகிச்சை அளிப்பது மற்றும் சிறைகளில் உள்ள 30 அவசர கால ஊர்திகளிலும் உயிர்காக்கும் மருத்துவ உபகரணங்களை இருப்பில் வைத்திருப்பது ஆகியவை இன்றியமையாததாகும். இதனைக் கருத்தில்கொண்டு, 9 மத்திய சிறைகள், 3 பெண்கள் தனிச் சிறைகள், ஒரு* Borstal school *மற்றும் மாவட்ட சிறை ஆகியவற்றில் உள்ள 13 மருத்துவமனைகள் மற்றும் 30 அவசரகால ஊர்திகளுக்கு 2,34,00,000 ரூபாய் செலவில்* Oxygen Flow Meter, Trolley, Multi channel Monitor, Ventilator *முதலிய 13 வகையான உயிர்காக்கும்*

மருத்துவ உபகரணங்கள் வாங்கி வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

பிற்பகல் 12—35

2. சிறைத் துறைப் பணியாளர்களின் நலனைக் கருத்திற்கொண்டு சிறைப் பணியாளர்களுக்கு ஒவ்வோர் ஆண்டும் 100 குடியிருப்புகள் கட்டுவதற்கு அரசால் கொள்கையளவில் ஏற்கெனவே ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. அதன்படி, 2012—2013, 2013—2014 மற்றும் 2014—2015 ஆகிய ஆண்டுகளில் தலா 100 குடியிருப்புகள் வீதம் 300 குடியிருப்புகள் கட்டுவதற்கு அரசு ஆணையிட்டுள்ளது. இவற்றில் 100 குடியிருப்புகள் கட்டி முடிக்கப்பட்டு, சிறைத் துறைப் பணியாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. 100 குடியிருப்புகள் கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும், 100 குடியிருப்புகள் கட்ட தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகத்தால் ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு, பரிசீலனையில் உள்ளன. நடப்பாண்டில், மேலும் 100 களப் பணியாளர்களுக்கு வீட்டு வசதி செய்து கொடுக்கும் வகையில், 14 கோடியே 57 இலட்சம் ரூபாய் செலவினத்தில் புழல் வளாகம், பாளையங்கோட்டை மற்றும் கோவை ஆகிய மத்திய சிறை வளாகங்களில் தலா 30 குடியிருப்புகள், புதுக்கோட்டை Borstal school *மற்றும் மாவட்ட சிறை வளாகத்தில் 10 குடியிருப்புகள் என மொத்தம் 100 குடியிருப்புகள் கட்ட அனுமதி வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த அறிவிப்புகள் சிறைத் துறை மேம்படவும் சிறைப் பணியாளர்கள் மேலும் செம்மையாகப் பணியாற்றவும் வழிவகுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

(ஆ) கடலாடி வட்டத்தில் அனல் மின் நிலையம் அமைத்தல், புதிய துணை மின் நிலையங்கள் அமைத்தல் உள்ளிட்ட மின் துறைத் திட்டங்கள் குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கண்ணால் காணமுடியாத, செயலால் மட்டுமே பார்க்கக்கூடியதும் நாட்டின் பொருளாதாரத்திலும், மனிதனின் வாழ்வாதாரத்திலும் முக்கிய பங்கு வகிப்பதுமான மின்சாரத் துறையில் தமிழகம் தன்னிறைவுபெறும் அளவுக்கு கடந்த நான்கு ஆண்டுகளில் எனது தலைமையிலான அரசு அளப்பரிய சாதனைகளைச் செய்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)*